# வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகாத இடங்களும்.

*அனைவரும் சுட்டிக் காட்டுகிற முதன்மையான பிழை இதுதான். புள்ளி வைத்த எழுத்து எழுத வேண்டுமா? எழுத வேண்டாமா ? இதுதான் பிரச்சனை. தொல்காப்பியம், நன்னூல் என அனைத்து இலக்கண நூல்களும் இது பற்றி எழுதியிருந்தாலும், இன்றைய சூழலில் இதைப் புரிந்தவர்கள், புரிந்து இயங்குபவர்கள் மிகச் சிலரே. ஏன் இந்த நிலை. இந்தப் பிரச்சனையை நான் உற்று நோக்கிய பொழுது, பிரச்சனைக்கான காரணத்தைக் கண்டறிந்தேன். அனைத்து இலக்கண நூல்களும் மிகும் இடங்களுக்கு ஒரு பட்டியலும், மிகாத இடங்களுக்கு ஒரு பட்டியலும் கொடுத்துள்ளன. இரண்டு பட்டியல்களையும் படிக்கும் பொழுது அவை நினைவில் நிற்கின்றன. படித்து முடித்ததும் மிகுமா ? மிகாதா என்ற குழப்பம் மீண்டும் எழுகிறது. விரைவில் படித்தவை அனைத்தும் மற(றை)ந்து போயின. பெரும்பாலானவர்களின் நிலை இது தான்.*

*எனவே இந்தப் பயிற்சியில் நான் உங்களுக்கு மிகும் இடங்களை மட்டுமே வரிசைப்படுத்தப் போகிறேன். அதாவது ஒற்றெழுத்து போடவேண்டிய இடங்களை மட்டும் வரிசைப் படுத்தப் போகிறேன். நீங்கள் எங்கு ஒற்றெழுத்து போடவேண்டும் என்பதை வரிசைப்படுத்தி, நினைவில் நிறுத்தி, அங்கு மட்டும் போடுங்கள். மற்ற இடங்களில் போட வேண்டியதில்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள். இதில் நீங்கள் வெற்றி கண்டபிறகு ஒற்றெழுத்து மிகா இடங்களைத் தெரிந்து கொள்ளலாம். சரிதானே. வாழ்த்துகள். தொடருவோம்.*

## வல்லெழுத்து மிகும் இடங்கள்

வல்லெழுத்துளில் க், ச், த், ப் என்கிற நான்கு எழுத்துகள்தான் மிகும். நிலைமொழியோடு, வருமொழி இணையும் பொழுது நிலைமொழியுடன் “ஒற்று” இணைத்து எழுதுவது ஒற்று மிகுதல் ஆகும். அருகே வருமொழியின் முதல் எழுத்துப் பட்டியல் உள்ளது. இதிலுள்ள ஓர் எழுத்து வருமொழியின் முதல் எழுத்தாக இருந்து, நிலைமொழி கீழுள்ளவாறு இருந்தால் நிலைமொழியுடன் ஒற்றெழுத்தை இணைக்க வேண்டும்.

| நிலை மொழி | | ஒற்று | வருமொழியின் முதல் எழுத்துப் பட்டியல் |
|---|---|---|---|
| ? | + | க் | க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ |
| | | ச் | ச, சா, சி, சீ, சு, சூ, செ, சே, சை, சொ, சோ, சௌ |
| | | த் | த, தா, தி, தீ, து, தூ, தெ, தே, தை, தொ, தோ, தௌ |
| | | ப் | ப, பா, பி, பீ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ, பௌ |

அந்த+பக்கம் = அந்தப்பக்கம், (அந்த-நிலைமொழி, பக்கம்-வருமொழி, ப-முதலெழுத்து, ப்-மிகுகிறது)

## அகரவரிசையில் உள்ள சொற்களை நெஞ்சில் நிறுத்தவும்.

1. அ, இ, எ = (அ+பழம்) அப்பழம், இக்கல், எச்செடி.

2. அந்த, இந்த, எந்த = (அந்த+பக்கம்) அந்தப்பக்கம், இந்தக்கண், எந்தச்சாலை.
3. அங்கு, இங்கு, எங்கு = (அங்கு+கண்டேன்) அங்குக்கண்டேன். இங்குப்பார், எங்குச்சென்றான்
4. ஆங்கு, ஈங்கு, யாங்கு = (ஆங்கு+போ) ஆங்குப்போ, யாங்குத்தேடினாய், ஈங்குக்கவனி,
5. ஆண்டு, ஈண்டு, யாண்டு = (ஆண்டு+செல்) ஆண்டுச்செல், ஈண்டுக்காண்க, யாண்டுத்தேடினாய்,
6. அப்படி, இப்படி, எப்படி = (அப்படி+செல்) அப்படிச்செல், இப்படிப்பார், எப்படிச்செய்தாய்,
7. அவ்வகை, இவ்வகை, எவ்வகை = அவ்வகைச்செயல், இவ்வகைப்பாடம், எவ்வகைச்சட்டம்

8. அன்றி, இன்றி = (அவனற்றி+பிறர்) அவனன்றிப்பிறர், இவனன்றிச்சிலர்,
9. இனி, தனி = (இனி+காண்போம்) இனிக்காண்போம், (தனி+பாடல்) தனிப்பாடல்,
10. மற்ற, மற்றை = (மற்ற+பிள்ளைகள்) மற்றப்பிள்ளைகள், மற்றைக்காட்சி,
11. முன்னர், பின்னர் = (முன்னர்+கூறியவாறு) முன்னர்க்கூறியவாறு, பின்னர்க்காண்க,
12. எல்லா, அனைத்து = (அனைத்து+சிக்கல்) அனைத்துச்சிக்கல், எல்லாப்பாடங்களும்,

13. மிக = (மிக+கலங்கி) மிகக்கலங்கி, மிகத்தடிமனாக, மிகப்பெரிய,

# இலக்கண அடிப்படையில் சொற்களை வகைப்படுத்துவோம்.

1. வன்தொடர்குற்றியலுகரத்தில் (கு,சு,டு, து,பு,று - ஓசை குறைந்து வருவது) மிகும்.

தேக்கு, நச்சு, பாட்டு = தேக்குப்பலகை, நச்சுப்பொய்கை, பாட்டுப்பாடு,

கூத்து, தப்பு, கற்று = கூத்துப்போடு, தப்புக்கணக்கு, கற்றுக்கொண்டான்.

2. வேற்றுமை உருபுகளுக்குப் பின் மிகும். (2, 4, 7 ஆம் வேற்றுமையில் மட்டும்)

2அ. இரண்டாம் வேற்றுமை உருபுக்குப்பின் (ஐ)

கண்ணை+பார் = கண்ணைப்பார், முதுகைச்சொறி, நாக்கைத்தடவு,

2ஆ. நான்காம் வேற்றுமை உருபுக்குப்பின் (கு)

பாலுக்கு+காவல் = பாலுக்குக்காவல், நெஞ்சுக்குப்பாட்டு, காதுக்குத்தேன்,

2இ. ஏழாம் வேற்றுமை விரி (இடை)

காட்டிடை+சென்றான் = காட்டிடைச்சென்றான், சொல்லிடைக்குற்றம்,

3. உருபும்பயனும் உடன்தொக்கத் தொகை (வேற்றுமை உருபும், அதன் பயனும் மறைந்து இருக்கும் தொடர்) (பானையை - ஐ என்ற உருபு இந்தச் சொல்லில் தெரிகிறது) தண்ணீர் + பாத்திரம் = தண்ணீர்ப்பாத்திரம் (தண்ணீரை உடைய பாத்திரம் என்று பொருள் பெறும். ஐ என்ற உருபு மறைந்துள்ளது) வேற்றுமை உருபும் பயனும் மறைந்து இருக்கும். இந்த வகையான தொடர்களில் க், ச், த், ப் மிகும்.

3அ. இரண்டாம் வேற்றுமை (ஐ)

அறிவு+களஞ்சியம் = அறிவுக்களஞ்சியம் (அறிவை உடைய களஞ்சியம்), சொற்களஞ்சியம்,

3ஆ. மூன்றாம் வேற்றுமை (ஆல்)

வெள்ளி+கவசம் = வெள்ளிக்கவசம் (வெள்ளியால் ஆகிய கவசம்), தங்கச்சிலை, மரப்பாவை,

3இ. நான்காம் வேற்றுமை (கு)

கோழி+தவிடு = கோழித்தவிடு (கோழிக்குப்போடும் தவிடு), பள்ளிக்குச் சென்றான்,

3ஈ. ஏழாம் வேற்றுமை (கண்)

கடற்கரை+சாலை = கடற்கரைச்சாலை (கடற்கரையின்கண் உள்ள சாலை) நூலகப்பணி,

4அ. சொற்களின் இறுதியில் ய், எழுத்து இருந்தால்.

(நாய்+குட்டி = நாய்க்குட்டி) போய்த்தேடு, பொய்ச்சான்று,

4ஆ. சொற்களின் இறுதியில் ர், எழுத்து இருந்தால்.

(நீர்+குமிழி = நீர்க்குமிழி) மலர்ச்செண்டு, வேர்ப்பலா,

4இ. சொற்களின் இறுதியில் ழ், எழுத்து இருந்தால்.

(தமிழ்+சான்றோர் = தமிழ்ச்சான்றோர்) தமிழ்த்தாய், கூழ்ப்பசை, தமிழ்ச்சங்கம்,

5. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின். (தீ, பூ, ஈ, பா, தை)

(தீ+பந்தம் = தீப்பந்தம்) பூச்செண்டு, ஈக்கால், பாச்சுவடி, தைப்பொங்கல், தீச்சட்டி,

6. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில்

(சாரை+பாம்பு = சாரைப்பாம்பு) முல்லைக்கொடி, தமிழ்ச்சொல், மார்கழித்திங்கள், மல்லிகைப்பூ,

7. ஆறாம் வேற்றுமை (இனது) அஃறிணைக்கு மட்டும் மிகும்

(குருவி+கூடு = குருவிக்கூடு) (குருவியினது கூடு)

உயர்திணைக்கு மிகாது (துறவி+குடில் = துறவி குடில்) (துறவி உயர்திணை மிகாது)

8. சில மென்தொடர்க் குற்றியலுகரம் (ண்டு, ம்பு, ங்கு, ன்று, ந்து)

(நண்டு+கொடுக்கு=நண்டுக்கொடுக்கு) பாம்புப்புற்று, குரங்குக்குட்டி, கன்றுக்குட்டி, மருந்துக்கடை,

9. உவமைத்தொகையில் (தாமரை போன்ற முகம்) (தாமரை+கண்ணன் = தாமரைக்கண்ணன்)
மலர்க்கண், அமுதச்சொல், தாமரைத்திருவடி, முத்துப்பல், சிங்கத்தலைவன்

10. உருவகங்களின் பின், (பசி+பிணி = பசிப்பிணி) (பசி நோயாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது)
முகத்தாமரை, கைத்தாமரை, வாய்ப்பவளம், வாழ்க்கைப்படகு, கண்ணீர்ப்பூக்கள்.,

11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின்.
(ஓடாத, பாடாத, செய்யாத = எதிர்மறைப் பெயரெச்சம்) (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் = ஓடா, பாடா, செய்யா)
(ஓடாத+குதிரை = ஓடாக்குதிரை) பாடாக்குயில், செய்யாப்பணி, நில்லாக்குதிரை, கொய்யாக்கனி,

12. ம் என்று முடியும் நிலைமொழிக்குப்பின். (மரம்+சட்டம் = மரச்சட்டம்) ம் கெட்டு, வல்லெழுத்து மிகும்.
(தரம்+கட்டுப்பாடு = தரக்கட்டுப்பாடு) (உரம்+கடை = உரக்கடை) (வீரம்+செயல் = வீரச்செயல்)

13. தனிக்குற்றெழுத்தை அடுத்து வரும் ஆ வின் பின் வல்லெழுத்து மிகும்.
கனா (க - தனிக்குற்றெழுத்து, னா ஆகார ஈற்று எழுத்து)
(கனா+கண்டேன்) கனாக்கண்டேன், இராக்காலம், நிலாச்சோறு, சுறாத்தலை, பலாப்பழம்.

14அ. வினையெச்சத்தின் பின் மிகும் (அகர ஈற்று வினையெச்சம்)
(சொல்ல, போக, எழுத, படிக்க, பாட, பேச, ஓட) (சொல்ல+கேட்டேன் = சொல்லக்கேட்டேன்)
போகக்கூடாது, எழுதச்சொல், படிக்கத்தடை, பாடப்போ, பேசத்தெரியும், ஓடக்கூடாது)

14ஆ. வினையெச்சத்தின் பின் மிகும் (இகர ஈற்று வினையெச்சம்)
(ஓதி, ஏறி, புரட்டி, பாடி, காட்டி) (ஓதி+கெடுத்தான் = ஓதிக்கெடுத்தான்)
ஏறிச்சென்றான், புரட்டிப்போட்டான், பாடித்தள்ளினான், காட்டிப்பிழைத்தான்,

14இ. போய், ஆய் என்ற வினையெச்சச் சொற்களுக்குப்பின், போய்த்தூங்கு, சொன்னதாய்ச்சொல்,

15. பண்புத்தொகையில் மிகும் (வெள்ளை, கறுப்பு, அருமை, சதுரம், சிவப்பு)
(வெள்ளை+காளை = வெள்ளைக்காளை) கறுப்புச்சட்டம், அருமைத்தம்பி, சதுரப்பனை, சிவப்புக்கொடி,

16. முற்றுகரத்தின் பின் வலி மிகும் (பொது, கனவு, அளவு, தெரு, நடு, உழவு, புது, திரு, அணு)
(பொது+கூட்டம்= பொதுக்கூட்டம்) கனவுக்கன்னி, அளவுச்சாப்பாடு, தெருச்சண்டை, நடுத்தெரு, உழவுத்தொழில், புதுப்பானை, திருக்குளம், அணுத்திரள்,

## பிற.....

1அ. எண்ணுப்பெயரின் பின் (எட்டு, பத்துக்கு பின்னால் மட்டும்) (எட்டு+கால் = எட்டுக்கால்)
பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, எட்டுத்திக்கு, பத்துப்பணம், பத்துச்சேனை,
1ஆ மூன்று என்ற சொல் குறைந்து மு ஆக வரும்பொழுது, (மூன்று+கண் = முக்கண்)
முச்சடங்கு, முப்பரிமாணம், முத்தரப்பு, முப்பத்து, முப்பால், முச்சங்கம்,
1இ. ஒன்று, இரண்டு திரிந்து ஐகார ஈறுபெறும் பொழுது (ஒற்றை, இரட்டை, அரை)
ஒற்றைத்தலைவலி, ஒற்றைப்பனை, இரட்டைக்குழந்தை, இரட்டைச்சங்கிலி,
அரைக்காசு, அரைக்கம்பம், அரைப்புள்ளி, அரைச்சம்பளம்,

2. திசைப் பெயர்களின் பின் வலி மிகும் (கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு)
(கிழக்கு+சாலை = கிழக்குச்சாலை) கிழக்குத்தெரு, மேற்குப்பாதை, வடக்குத்திசை, தெற்குக்கோபுரம், கீழ்த்தெரு, கீழைச்சேரி, மேலக்குப்பம், மேலைப்பதி,

ஒவ்வொன்றாகப் படித்து, உள்வாங்கவும், எடுத்துக்காட்டுகளாகத் தரப்பட்டுள்ள சொற்களை நெஞ்சில் நிறுத்தி, நீங்கள் புதிய எடுத்துகாட்டுகளை உருவாக்கவும். மிகும் இடங்கள் உங்களுக்குள் பதிந்துவிடும்.

# ஒற்றுப் பிழை - ஒற்றெழுத்து - எழுதுவதா ? வேண்டாமா ?

சொல்லிப் பார் - ஒற்று மிகுந்துள்ளது
தெரிந்து கொள் - ஒற்று மிகவில்லை.

பழனிமலை முருகன் வேலை தேடினானா ? (வேலை-பணி)
பழனிமலை முருகன் வேலைத் தேடினானா ?

பாண்டிய மன்னன் வாளை பிடித்தானா ? (வாளை - மீன்)
பாண்டிய மன்னன் வாளைப் பிடித்தானா

கத்திப் பேசினால் கத்தி பேசும். (உரத்துப் பேசினால் கத்திதான் பேசும்)

அவன் பிட்டு தின்றான். (பிட்டு என்பது உணவு)
அவன் பிட்டுத் தின்றான்.

கை பிடி (கையைப் பிடி)
கைப்பிடி

தோண்டி புதைத்தான் (தோண்டி என்பது பாத்திரம்)
தோண்டிப் புதைத்தான்

வழிபடுதல் (வணங்குதல்)
வழிப்படுதல் (பின்பற்றுதல்)

கடலை சாப்பிட்டான் (வேர்கடலை)
கடலைச் சாப்பிட்டான்

விட்ட குடிசை (வேண்டாம் என்று விட்ட குடிசை)
விட்டக் குடிசை (விட்டத்தை உடைய குடிசை)

தயிர் கடை (தயிரைக் கடை)
தயிர்க் கடை (தயிர் விற்கும் கடை)

கை குட்டை (குட்டையான கை)
கைக்குட்டை (சிறிய துண்டு)

நாளை கணக்கிடுவான் (நாளை கணக்கு செய்வான்)
நாளைக் கணக்கிடுவான் (நாளை எண்ணுவான்)